ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1958/19 - 2016 මාර්තු මස 16 වැනි බදාදා - 2016.03.16

1958/19 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MCUDP/LA/ABT(W-05)/14/03.
காணி அமைச்சின் இல.: 4-3/10/2014/LRB/292.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

(*கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத் திட்டத்தின் கீழ் அமுல் செய்யப்படுகின்ற உப கருத்திட்டமொன்றான உடுமுல்லை கிராமத்தில், மாதிவளை கிழக்கு திசைக்கு திரும்பும் வாய்க்காலின் இடது பக்கமாக அமைந்துள்ள காணியை வாய்க்கால் வரப்பைப் பேணிப் பாதுகாப்பதற்காக எடுத்துக் கொள்ளல்*)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 502 - உடுமுல்லை வடக்கு கிராம அலுவலர் பிரிவில், உடுமுல்லை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.03.04 ஆம் திகதிய ஸை: 9615 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1, 2, 3, 4, 5 எனக் காட்டப்பட்ட 0.5287 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட ஐந்து (5) காணித் துண்டுகள்:

1. துண்டு இல. 1
காணியின் பெயர்: போகஹவத்த, எலமுல்ல வத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: என். என். பத்பேரிய, அம்பத்தலே, அங்கொடை; விஸ்தீரணம்: 0.1465 ஹெக்டயார்.

2. துண்டு இல. 2
காணியின் பெயர்: அம்பத்தலேவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், தற்காலிகக் கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: கே. ஏ. குணசேக்கர, கே. டீ. என். ஆரியரத்ன, கே. டீ. எஸ். சிறிவர்தன, இல. 62, அம்பத்தலே, அங்கொடை; விஸ்தீரணம்: 0.0385 ஹெக்டயார்.

3. துண்டு இல. 3
காணியின் பெயர்: அம்பத்தலேவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: கே. வீ. பீ. குணசேக்கர, இல. 62, அம்பத்தலே, அங்கொடை; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.

4. துண்டு இல. 4
காணியின் பெயர்: அம்பத்தலேவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0014 ஹெக்டயார்.

5. துண்டு இல. 5
காணியின் பெயர்: தெரியாது; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: எச். ஹேமசந்திர பிந்து, இல. 5, அம்பத்தலே, அங்கொடை; விஸ்தீரணம்: 0.3418 ஹெக்டயார்.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் மேலும், குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும், இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சீ. டப். அபேசூரிய,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கொழும்பு மாநகர் சார்ந்த நகர
அபிவிருத்திக் கருத்திட்டம்,
கொலொன்னாவை பிரதேச செயலகம்.

கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக்
கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல்
அலுவலகம்,
இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான
கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.
2016, மாச்சு 16.

4 - 234

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.